ஜனாபாய் (விதவை), டிங்கர்ராவ் கோர்படே மற்றும் பலர்

–எதிர்–

தி/ள். ஐ.சி.ஐ.சி.ஐ., லொம்பார்ட் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(உரிமையியல் மேல்முறையீடு எண்.5220/2022)

ஆகஸ்ட் 10, 2022

[மாண்புமிகு நீதியரசர்கள் திரு. ஹேமந்த் குப்தா மற்றும் திரு. விக்ரம் நாத்]

மோட்டார் வாகனச் சட்டம் 1988 – பிரிவு 166 – மோட்டார் விபத்து கோரிருமை – இழப்பீடு வழங்குதல் – பாதிக்கப்பட்டவர்–இறந்தவர் ஒரு இரு சக்கர வாகனத்தை ஓட்டி கொண்டு வந்தார், அப்பொழுது கார் ஒன்று எதிர் திசையிலிருந்து வந்து பாதிக்கப்பட்டவரின் மோட்டார் சைக்கிள் மீது மோதியது – பாதிக்கப்பட்டவர் இறந்தார், அவரது மனைவி–மேல்முறையீட்டாளருக்கு காயம் ஏற்பட்டது – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, வாகனத்தின் ஓட்டுநர் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது – இழப்பீட்டை கோரி பிரிவு 166/1988–ன் கீழ் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது – மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயத்தால் இழப்பீட்டு தொகையாக ரூ.8,90,000/– கணக்கிடப்பட்டு காரின் உரிமையாளரால் இந்த விபத்து ஏற்பட்டது என தீர்மானிக்கப்பட்டது – ஆயினும், காரின் உரிமையாளரும், ஓட்டுநரின் தரப்பிலுள்ள கவனக்குறைவின் காரணமாகவே விபத்து ஏற்பட்டது என்ற காண்முடிவை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை – விபத்துக்குள்ளான கார் விபத்தை ஏற்படுத்தவில்லை என்பதை நிரூபிக்கும் விதமாக காரின் உரிமையாளரோ அல்லது காப்பீட்டு நிறுவனமோ ஓட்டுநரை விசாரிக்கவில்லை என்ற சங்கதியை உயர்நீதிமன்றம் கவனித்து – மேல்முறையீட்டாளரின் கூற்றை

சந்தேகித்து காப்பீட்டு நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீடானது அனுமதிக்கப்பட்டு, கோருரிமை மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது – மேல்முறையீட்டில், முடிவு: சுருக்கமான தன்மை கொண்ட விண்ணப்பத்தை, 1988, மோட்டார் வாகனச் சட்டம், பிரிவு 166–இன்கீழ் விசாரிக்கையில், குற்றவியல் விசாரணையில் குற்றங்களை நிரூபிக்க சாட்சிய விதியை பயன்படுத்தமுடியாது – இந்த சட்டத்தின் கீழ் மனுவானது அதன் முன் வைக்கப்பட்டுள்ள ஆதாரத்தின் அடிப்படையில் முடிவு செய்யப்படவேண்டும் அல்லது ஒரு குற்றவியல் வழக்கில் அதன் முன் நடந்த ஆதாரங்களை வைத்தோ அல்லது அது நடப்பதற்கு காரணமாக இருந்திருக்கும் ஆதாரத்தை வைத்து முடிவு செய்வது போல் செய்யப்படமாட்டாது – விபத்தில் காயமடைந்த மேல்முறையீட்டாளரின் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மையை சந்தேகிக்க ஒரு காரணமேதும் இல்லை – உயர்நீதிமன்றத்தின் அணுகுமுறை முழுவதும் தெளிவாகவே நிலைக்கத்தக்கதல்ல – மேல்முறையீட்டாளர்கள் தீர்ப்பாயத்தால் தீர்வளிக்கப்பட்ட இழப்பீட்டுத்தொகையை உயர்த்தக்கோரி உயர் நீதிமன்றத்தில் எந்த மேல்முறையீட்டையும் தாக்கல் செய்யவில்லை – மேல்முறையீட்டாளர்கள் கூடுதல் இழப்பீடு பெற உரிமையுடையவர்கள் – எனவே, அரசமைப்புச் சட்டம், வகுமுறைக்கூறு 142–ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, இந்நீதிமன்றம், இழப்பீட்டுத்தொகையை அரசமைப்பு ஆயத்தின் தீர்ப்பின்படி மறு மதிப்பீடு செய்ய முடிவு செய்தது (நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – எதிர்– பிரணாய் சேத்தி மற்றும் பலர் (20107) 16 எஸ்.சி.சி. 680 : (2017) 13 எஸ்.சி.ஆர். 100) – எனவே, இழப்பீட்டுத்தொகை ஆண்டுக்கு 7 சதவிகித வட்டியுடன் சேர்த்து ரூ.11,63,000/–ஆக கணக்கிடப்படும் – விளைவாக,

உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது – இந்திய அரசியலமைப்புச் சட்டம் – வகுமுறைக்கூறு 142.

மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

முடிவு : 1988, மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 166–இன்படி விண்ணப்பத்தை தீர்மானிக்கையில், குற்றவியல் விசாரணையில் குற்றங்களை நிரூபிப்பதற்கான சாட்சிய விதியை பயன்படுத்தமுடியாது என்று நாங்கள் கருதுகிறோம். விபத்தில் காயமுற்ற 1–ஆம் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையை சந்தேகிக்க காரணம் ஏதுமில்லை. சட்டப்படியான இந்த விண்ணப்பம், ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்படவேண்டுமே தவிர, குற்றவியல் விசாரணையில் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கக்கூடிய சான்றின் அடிப்படையில் தீர்மானித்தலாகாது. உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறை முழுவதும் நிலைக்கத்தக்கதல்ல. கோருரிமை மனுவில் மகள்கள் தரப்பினராக சேர்க்கப்பட்டாலும், குற்றம் புரிந்தவர் செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகையானது உயர்த்தப்படாது, இறந்தவரின் மகள்களை கோருரிமையாளர்களாக சேர்ப்பது என்பது அவசியமற்றது. மகள்களுக்கு திருமணம் ஆகிவிட்டதால், தாய் தனது மகள்களை தரப்பினராக சேர்க்கவில்லை. அது உண்மையில் உயர் நீதிமன்றத்தின் தீர்முடிவின் விளைவாக அல்ல. (பத்திகள் 10 & 11)

மேல்முறையீட்டாளர்கள் தீர்ப்பாயத்தால் தீர்வளிக்கப்பட்ட இழப்பீட்டை உயர்த்தக்கோரி உயர் நீதிமன்றத்தின் முன்பு எந்த மேல்முறையீட்டையும் தாக்கல் செய்யவில்லை. உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடேட் – எதிர்– பிரனய் சேதி மற்றும் பலர் (2017)16 எஸ்.சி.சி. 680 என்ற வழக்கின்

தீர்ப்புரை அரசமைப்பு அமர்வால் வழங்கப்பட்டது, எனினும் காப்பீட்டு நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதால், உயர் நீதிமன்றத்திற்கு இழப்பீட்டை உயர்த்துவது குறித்து வினாவை ஆராய்வதற்கான வாய்ப்பில்லை. பிரனே சேதி என்ற வழக்கில் இந்நீதிமன்றத் தீர்ப்புரையின்படி, குறிப்பாக வருங்கால வாய்ப்பு வளங்களையும், மற்ற இழப்பீடுகளையும் பொருத்தவரையில் அவற்றை உயர்த்திப்பெற மேல்முறையீட்டாளர்கள் தகுதியுடையவர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 142–இன் கீழான அதிகாரத்தை செலுத்தி, அரசமைப்பு அமர்வின் தீர்ப்புரைக்கு இணையாக இழப்பீட்டுத் தொகையை மறுமதிப்பீடு செய்ய நாங்கள் தீர்மானித்துள்ளோம். மேல்முறையீட்டாளர் இந்நீதிமன்றத்தில் அளித்துளள் கணக்கீட்டின் அடிப்படையில், மனைவிக்காக வாழ்க்கைத்துணை நல்லுறவு மற்றும் பிள்ளைகளுக்காக பெற்றோரது நல்லுறவு என்ற பேரிலும் இழப்பீடு கோரியுள்ளார், எனினும் யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– சதிந்தர் கவுர் மற்றும் பலர் (2021)11 எஸ்.சி.சி 780 என்ற வெளியிடப்பட்ட மூவர் அமர்வின் தீர்ப்புரையை கருத்திற்கொண்டு பார்க்கையில், அன்பு மற்றும் பாசத்தின்பேரிலான இழப்பீடு ஏற்புடையதல்ல என்றும், மனைவிக்காக வாழ்க்கைத்துணை நல்லுறவு, பிள்ளைகளுக்காக பெற்றோரது நல்லுறவு ஆகியவற்றின்பேரிலான இழப்பீடு ஏற்புடையது என்பதாகும். (பத்தி 12 & 13)

ஆணையுறுதி ஆவணத்தில் 1–ஆம் மேல்முறையீட்டாளரின் சான்றுரைப்படி, அவரது கணவர் ரூ.12,450/–ம் ஊதிய பெற்றிருந்தார் என்றும், அவர் 50 வயதை கடந்தவர் என்பதுமாகும். மாத ஊதியத்திற்கான சான்று இல்லாததால், கற்றறிந்த தீர்ப்பாயம், இறந்தவரின் மாத

வருமானத்தை ரூ.10,000/–என கணக்கிட்டது. எனவே, அவரது வருமானம், வயது மற்றும் எதிர்கால நலன்களை கருத்திற்கொண்டு இழப்பீட்டுத் தொகையை பின்வருமாறு கணக்கிட்டது: அ) வருமான இழப்பீடாக ரூ.10,12,440/– ஆ) சொத்து இழப்பாக ரூ.15,000/– இ) மனைவிக்கு வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பாக ரூ.40,000/–ம், இரண்டு பிள்ளைகளுக்கு பெற்றோர் சார்ந்த நல்லுறவின் இழப்பாக ரூ.80,000/–ம் ஈ) ஈமக்கடன் செலவீனமாக ரூ.15,000/–ம். எனவே, கோருரிமை மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் கைவரப்பெறும் நாள்வரை தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்டதுபோன்று, ஆண்டு ஒன்றுக்கு 7% வட்டியுடன்கூட தொகை ரூ.11,63,00/–ம் இழப்பீடாக வழங்கப்படுகிறது. (பத்திகள் 14 & 15)

நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – எதிர்– பிரணாய் சேத்தி மற்றும் பலர் (20107) 16 எஸ்.சி.சி. 680 : (2017) 13 எஸ்.சி.ஆர். 100 – பின்பற்றப்பட்டது.

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் – எதிர்– சதிந்தர் கவுர் மற்றும் பலர் (2021) 11 எஸ்.சி.சி. 780 – சார்வுறப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவு</u>

[2017] 13 எஸ்.சி.ஆர். 100 பத்தி 12 பின்பற்றப்படுகிறது

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்.5220/2022.

முதல் மேல்முறையீடு எண்.3333/2015–இல் அவுரங்காபாத்திலுள்ள மும்பை உயர்நீதிமன்றத்தின் 14.12.2018 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

அதுல் பாபாசாஹேப் தக்ஹ் – மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்குரைஞர்.

விஷ்ணு மெஹ்ரா, செல்வி. சாக்ஷி மிட்டல் – எதிர்மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. ஹேமந்த் குப்தா அவர்களால் பகரப்பட்டது.

1. இந்த வழக்கில் இறந்த டிங்கர்ராவ் ஷங்கர்ராவ் கோர்படே அவர்களின் வாரிசுதாரர்கள் தான் மேல்முறையீட்டாளர்கள், அவர்கள் பம்பாய் உயர்நீதிமன்ற 14.12.2018 தேதி மோட்டார் வாகன தீர்ப்பாயத்தில் ரூ.8,90,000/– மற்றும் 7 சதவிகித வட்டியுடன் வழங்கப்பட்ட தீர்ப்பை நீக்கறவு செய்ததை எதிர்த்து இந்த மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேல்முறையீட்டாளர்களின் கூற்றின்படி இறந்தவர் எண்.எம்.எச்.–20/ஏடி/956 கொண்ட மோட்டார் சைக்கிளை 01.06.2007 அன்று ஒட்டிச் செல்லும் பொழுது எதிர் திசையில் வந்த எண்.எம்.எச்.–41/சி–1777 கொண்ட மாருதி 800 இறந்தவர் மோட்டார் சைக்கிள் மீது கார் மோதியது. இதில் இறந்தவரும் மற்றும் 1–ம் மேல்முறையீட்டாளரும் கடுங் காயங்களுக்கு உட்பட்டனர். இறந்தவர் அரசு மருத்துவமனையில் (கட்டி மருத்துவமனை) அனுமதிக்கப்பட்டார். இறந்த நபர் 02.06.2007, அன்று கமல் நாயன் பஜாஜ் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு 25.06.2007 அன்று இறந்துவிட்டார். அவர் தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணத்தாலேயே இறந்துள்ளார்.

3. 02.07.2007 அன்று 1–வது மேல்முறையீட்டாளர் ஒரு மனுவினை கொடுத்து அதன்பால் புகார் ஒன்று தாக்கல் செய்யப்பட்டு, அது

ஓட்டுநர் மற்றும் தெரியாத வண்டியின் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது. 20.08.2007 அன்று விபத்துக்குள்ளான வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட ஓட்டுநரின் பெயர் மற்றும் வாகனத்தின் உரிமையாளரின் பெயர் தெரிவிக்கப்பட்டன. அதன்பின்னர், காவல்துறை தங்களுடைய விசாரணையை தொடர்ந்து ரமேஷ் சோனாவனின் மகனான சஞ்சய் என்ற ஓட்டுநர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

4. இறந்தவர் மரணமுற்றதன்பேரில், 08.05.2009 அன்று இழப்பீடு கோரி மோட்டார் வாகனச் சட்டம் 1988, பிரிவு 166–இன்கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. வாகனத்தின் உரிமையாளர் விபத்து நடந்ததை மறுத்தார். உரிமையாளர் தன்னுடைய எதிருரையில், ஓட்டுநர் தன்னால் நியமிக்கப்படவில்லை என்றும், அவர்களுக்கு இடையே பணியமர்த்துனர்–பணியாள் உறவுமுறை இல்லை என்று கூறினார். ஓட்டுநர் எதிருரை தாக்கல் செய்யவுமில்லை, சாட்சியாகவும் முன்னிலையாகவுமில்லை. காப்பீடு நிறுவனம் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

5. 1–ஆம் மேல்முறையீட்டாளர், ஜனா பாய்(அ.சா.1)–இன் சான்றுரை மற்றும் உரிமையாளர் – சுதாமன் வஞ்சி பாட்டில்–இன் வாக்குமூலத்தை பரிசீலித்ததன்பேரில், கற்றறிந்த தீர்ப்பாயமானது, ஊதிய சான்றிதழ் ஏதுமில்லாததால், இறந்தவரின் வருமானத்தை ரூ.10,000/– என கணக்கிட்டு, தனிப்பட்ட செலவீனத்திற்காக ஊதியத்தில் 1/3–ஐ கழித்த பின்னர் மாத செலவீனமாக ரூ.6,670–என கணக்கீடு செய்தது. பெருக்கல் எண் 11 பயன்படுத்தப்பட்டது. ஈமச் செலவீனங்களுக்காக தொகை ரூ.2,000/–ம், நல்லுறவின் இழப்புக்காக ரூ.5,000/–ம், சொத்திழப்புக்காக ரூ.2,500/–ம் ஆக மொத்தம் தொகை ரூ.8,90,000/– இழப்பீடாக கணக்கீடு செய்யப்பட்டது. உரிமையாளரின் வாகனத்தினால் விபத்து நிகழ்ந்தது

என்று கற்றறிந்த தீர்ப்பாயம் முடிவு செய்து பின்வரும் காண்முடிவுகளை பதிவு செய்தது:

> "..... அவரது காரின் ஓட்டுநருக்கு எதிராக குற்ற எண்.58/2007 பதிவு செய்யப்பட்டு, 3–ம் எதிர்மேல்முறையீட்டாளர் – சஞ்சய்க்கெதிராக தாக்கல் செய்யப்பட்டன என்று அவர் ஒப்புக்கொண்டார். காவல்துறை, அவரது காரை கைப்பற்றி, அது நீதிமன்ற உத்தரவின்படி திருப்பியளிக்கப்பட்டது. சஞ்சய்க்கெதிரான முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்ய அவர் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்று ஒப்புக்கொண்டார். மேலும், மேற்சொன்ன குற்ற வழக்கில் இருந்து சஞ்சயை பிணையில் எடுத்ததாக சான்றுரைத்தார். பிணை விண்ணப்பம், பிணையம் மற்றும் 7/12 பதிவேட்டின் நகல், சான்றாவணங்கள் 68, 69 மற்றும் 70 ஆகும். சுதாமன் பாட்டில் தனது முதல் விசாரணையில் 3–ம் எதிர்மேல்முறையீட்டாளரை குறித்து அவருக்கு அக்கறை இல்லையென்றும், 3–ம் எதிர்மேல்முறையீட்டாளர் அவரிடம் ஓட்டுநராக பணியாற்றவில்லை என்று கூறியது குறிப்பிடத்தக்கது. ஆயினும், சான்றாவணம் 68–ஆன பிணை விண்ணப்பம், 1–ம் எதிர்மேல்முறையீட்டாளரான சுதாமன் பாட்டில், 3–வது எதிர்மேல்முறையீட்டாளரான சஞ்சய் சோனாவனே–க்காக பிணையதararாக இருந்ததும், மேலும், அதில் குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணைய வாகனத்தின் ஓட்டுநர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. தனக்கும் 3–ம் எதிர்மேல் முறையீட்டாளருக்கும் தொடர்பில்லை என்று நீதிமன்றத்தின்

முன்பு பொய்யுரைத்தது தெளிவாக வெளிப்படுகின்றது. 3–ம் எதிர்மேல்முறையீட்டாளரோ அல்லது 1–ம் எதிர் மேல்முறையீட்டாளரோ முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்வதற்காக எந்த மனுவையும் தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காவல்துறை விசாரணை மேற்கொண்டு, பின்னர் 3–ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக குற்ற அறிக்கை தாக்கல் செய்தது. பதிவு எண். எம்.எச்.41/சி–1777 கொண்ட மாருதி கார் தான் விபத்துக்கு காரணம் என்றும், அது இறந்தவரின் மோட்டார் சைக்கிள் மீது மோதியதன் காரணமாகவே விபத்து ஏற்பட்டது என்றும் தெளிவாக வெளிப்படுகின்றது. 3–ம் எதிர்மேல்முறையீட்டாளர் மாருதி காரை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்தார் என்பதாகும்....."

6. ஆயினும், காப்பீட்டு நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், உரிமையாளரின் கார் விபத்தை ஏற்படுத்தியது என்றும், ஓட்டுனரின் தரப்பிலுள்ள கவனக்குறைவின் காரணமாகவே விபத்து நிகழ்ந்தது என்ற காண்முடிவுகளை உயர்நீதிமன்றம் ஏற்கமறுத்தது.

இதற்கிடையில், 1–ம் மேல்முறையீட்டாளர் தனது கூடுதல் வாக்குமூலத்தில், விபத்துக்குள்ளான காரின் பதிவு எண்ணை காவல் நிலையத்தில் அளித்துள்ளதால், அது குறித்த தகவலை மேல்முறையீட்டாளர்கள் விசாரணை அதிகாரியிடம் விசாரிக்கவில்லை என்று உயர்நீதிமன்றம் தீர்மானித்தது. எனவே, விபத்திற்கும், விபத்து ஏற்படுத்திய காருக்கும் இடையேயான தொடர்பு நிரூபிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர்கள் கூறமுடியாது.

7. விபத்துக்குள்ளான வாகனம், விபத்தில் ஈடுபடவில்லை என்பதை நிரூபிக்கும் பொருட்டு விபத்துக்குள்ளான வாகனத்தின் உரிமையாளரோ, காப்பீட்டு நிறுவனமோ ஓட்டுநரை விசாரிக்கவில்லை என்ற சங்கதியை உயர்நீதிமன்றம் கவனத்தில் கொண்டது. மேலும், காயமுற்ற பின்னல் அமர்ந்திருந்தவரான 1–ம் மேல்முறையீட்டாளர் 02.07.2007 அன்று அதாவது விபத்து நிகழ்ந்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்கு பின்னர் அடையாளம் கார் ஓட்டுநரின் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்று தீர்மானிக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் காயமுற்ற அவரது கணவர் பதிவு எண்.எம்.எச்.41/சி–1777 கொண்ட மாருதி 800 வாகனத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார், ஆனால், விபத்துக்குள்ளான மேற்படி வாகனத்தின் விவரம் அளிக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்படவில்லை. மேல்முறையீட்டாளர்களின் உண்மைத்தன்மையை சந்தேகித்ததன்பேரில், இறந்தவரின் திருமணமான மகள்களை கோருரிமை மனுவில் தரப்பினர்களாக குறிப்பிடவில்லை என்று காணப்பட்டது. எனவே, விபத்து குறித்து 1–ம் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலத்தை சந்தேகித்ததன்பேரில், காப்பீட்டு நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, கோருரிமை மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

8. நாங்கள் தரப்பினர்களுக்காக முன்னிலையான வழக்குரைஞர்கள் வாதங்களை கேட்டு, உயர்நீதிமன்றத்தின் உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல என்று கண்டறிந்தோம். 1–ம் மேல்முறையீட்டாளரும் அவரது கணவரும் 01.06.2007 அன்று நிகழ்ந்த விபத்தில் காயமுற்றனர். அவர் அவரது கணவரை 25.06.2007 அன்று இழந்துவிட்டார். விபத்து

நிகழ்ந்த சமயத்தில், 1–ம் மேல்முறையீட்டாளர் அல்லது மற்ற உறவினர்களின் முதலாய கவலை என்பது நெருக்கடியான நிலையில் இறந்தவரை கவனித்துக்கொள்வது என்பதாகும். முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்வதற்கு பதிலாக அவரது கணவரின் உடல்நலத்திற்கும், நல்வாழ்விற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதேயாகும். முதல் தகவல் அறிக்கையில் கார் ஓட்டுநரின் பெயரை குறிப்பிடாதது குறித்த காவல் துறையின் தகவலின் அடிப்படையிலேயே உயர்நீதிமன்றம் முதல் வழக்கு நடவடிக்கையை மேற்கொண்டது. 1–ம் மேல்முறையீட்டாளர், விபத்துக்குள்ளான வாகனத்தின் எண்ணை, 01.08.2011 அன்று நடந்த முதல் விசாரணையில் தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளர் அளித்த வாகன எண் விபத்தில் தொடர்புடையதல்ல என்று வாகன உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனம் தங்களது நிலைப்பாட்டிற்கு ஆதரவாக சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பிருந்தது. குறுக்கு விசாரணையில், தங்களது வாகனத்தை இடித்த வாகனத்தில் தான் அவர் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டார் என்று சான்றுரைத்தார். அவர் மனரீதியாக பாதிப்படைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாலேயே புகாரை தாமதமாக தாக்கல் செய்ததாக சான்றுரைத்தார்.

9. மாறாக, உரிமையாளர் சாட்சியாகவும் முன்னிலையானார். அவர் வாகனத்தை தனது பொறுப்பில் வைத்திருந்ததாகவும், கார் ஓட்டுநரான சஞ்சய்க்கு எதிரான மு.த.அ–வை தள்ளுபடி செய்வதற்கு அவர் வழக்கேதும் தாக்கல் செய்யவில்லை என்று ஒப்புக்கொண்டார். பிணை விண்ணப்பபடிவமும், பிணைப்பத்திரமும் (சா.ஆ.68, 69 மற்றும் 70) அவர் ஓட்டுநருக்கு அவர் பிணையதரராக இருந்தது குறிப்பிடுகிறது, ஆனால்

அவர் குற்றஞ்சாட்டப்பட்டவர் வாகனத்தின் ஓட்டுநர் என்று குறிப்பிட்டுள்ளார். அவரது வாகனமோ அல்லது ஓட்டுநரையோ பொய்யாக சிக்க வைத்தது குறித்து உரிமையாளர் புகார் ஏதும் அளிக்கவில்லை என்பதும் பதிவுருக்களில் இருந்து வெளிப்படுகின்றன.

10. 1988, மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 166–இன்படி விண்ணப்பத்தை தீர்மானிக்கையில், குற்றவியல் விசாரணையில் குற்றங்களை நிரூபிப்பதற்கான சாட்சிய விதியை பயன்படுத்தமுடியாது என்று நாங்கள் கருதுகிறோம். விபத்தில் காயமுற்ற 1–ஆம் மேல்முறையீட்டாளரின் வாக்குமூலத்தின் உண்மைத் தன்மையை சந்தேகிக்க காரணம் ஏதுமில்லை. சட்டப்படியான இந்த விண்ணப்பம், ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்படவேண்டுமே தவிர, குற்றவியல் விசாரணையில் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கக்கூடிய சான்றின் அடிப்படையில் தீர்மானித்தலாகாது. உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறை முழுவதும் நிலைக்கத்தக்கதல்ல என்று நாங்கள் காண்கிறோம்.

11. கோருரிமை மனுவில் மகள்கள் தரப்பினராக சேர்க்கப்பட்டாலும், குற்றம் புரிந்தவர் செலுத்தத்தக்க இழப்பீட்டுத் தொகையானது உயர்த்தப்படாது, இறந்தவரின் மகள்களை கோருரிமையாளர்களாக சேர்ப்பது என்பது அவசியமற்றது. மகள்களுக்கு திருமணம் ஆகிவிட்டதால், தாய் தனது மகள்களை தரப்பினராக சேர்க்கவில்லை. அது உண்மையில் உயர் நீதிமன்றத்தின் தீர்முடிவின் விளைவாக அல்ல.

12. மேல்முறையீட்டாளர்கள் தீர்ப்பாயத்தால் தீர்வளிக்கப்பட்ட இழப்பீட்டை உயர்த்தக்கோரி உயர் நீதிமன்றத்தின் முன்பு எந்த மேல்முறையீட்டையும் தாக்கல் செய்யவில்லை. உயர் நீதிமன்றத்தில்

மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடேட் –எதிர்– பிரனய் சேதி மற்றும் பலர் (2017)16 எஸ்.சி.சி. 680 என்ற வழக்கின் தீர்ப்புரை அரசமைப்பு அமர்வால் வழங்கப்பட்டது, எனினும் காப்பீட்டு நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டதால், உயர் நீதிமன்றத்திற்கு இழப்பீட்டை உயர்த்துவது குறித்து வினாவை ஆராய்வதற்கான வாய்ப்பில்லை. பிரனே சேதி என்ற வழக்கில் இந்நீதிமன்றத் தீர்ப்புரையின்படி, குறிப்பாக வருங்கால வாய்ப்பு வளங்களையும், மற்ற இழப்பீடுகளையும் பொருத்தவரையில் அவற்றை உயர்த்திப்பெற மேல்முறையீட்டாளர்கள் தகுதியுடையவர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். எனவே, அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 142–இன் கீழான அதிகாரத்தை செலுத்தி, அரசமைப்பு அமர்வின் தீர்ப்புரைக்கு இணையாக இழப்பீட்டுத் தொகையை மறுமதிப்பீடு செய்ய நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

13. மேல்முறையீட்டாளர் இந்நீதிமன்றத்தில் அளித்துளள் கணக்கீட்டின் அடிப்படையில், மனைவிக்காக வாழ்க்கைத்துணை நல்லுறவு மற்றும் பிள்ளைகளுக்காக பெற்றோரது நல்லுறவு என்ற பேரிலும் இழப்பீடு கோரியுள்ளார், எனினும் யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– சதிந்தர் கவுர் மற்றும் பலர் (2021)11 எஸ்.சி.சி 780 என்ற வெளியிடப்பட்ட மூவர் அமர்வின் தீர்ப்புரையை கருத்திற்கொண்டு பார்க்கையில், அன்பு மற்றும் பாசத்தின்பேரிலான இழப்பீடு ஏற்புடையதல்ல என்றும், மனைவிக்காக வாழ்க்கைத்துணை நல்லுறவு, பிள்ளைகளுக்காக பெற்றோரது நல்லுறவு ஆகியவற்றின்பேரிலான இழப்பீடு ஏற்புடையது என்பதாகும். இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

"30. மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடேட் –எதிர்– நானு நாம் (மேக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடேட் – எதிர்– நானு ராம், (2018)18 எஸ்.சி.சி. 130 : (2019)3 எஸ்.சி.சி. (உரிமையியல்) 146 (2019)3 எஸ்.சி.சி. (குற்றவியல்) 153) என்ற வழக்கில் இந்நீதிமன்றம் "நல்லுறவு" என்பது பலவற்றை உள்ளடக்கும் என்று பொருள்விளக்கியுள்ளது, அது வாழ்க்கைத்துணை நல்லுறவு, பெற்றோரது நல்லுறவு மற்றும் மகவுரிமை சார்ந்த நல்லுறவு ஆகியவற்றை உள்ளடக்கும். நல்லுறவு உரிமை என்பது இறந்தவரின் உறவு, கவனிப்பு, உதவி, ஆறுதல், வழிகாட்டல், தேற்றரவு மற்றும் அன்பு ஆகியவற்றை உள்ளடக்கும், அது அவரது குடும்பத்திற்கு ஒரு இழப்பாகும். வாழ்க்கைத்துணையை பொருத்தவரையில், அது இறந்த வாழ்க்கைத் துணையின் தாம்பத்திய உறவையும் உள்ளடக்கும்.

31. பெற்றோரின் அகால மரணத்தின் காரணமாக பெற்றோர் உதவி, பாதுகாப்பு, அன்பு, சமுதாயம், ஒழுங்குமுறை, வழிகாட்டல், பயிற்ச்சி ஆகியவற்றை இழந்ததன்பேரில் பிள்ளைக்கு பெற்றோரது நல்லுறவு இழப்பீடு வழங்கப்படுகிறது. விபத்தினால் குழந்தை இறக்கும்நேர்வில், மகவுரிமை சார்ந்த நல்லுறவுக்கான இழப்பீடு என்பது பெற்றோரின் உரிமையாகும். குழந்தைக்கு மரணத்தை விளைவித்த விபத்து, இறந்தவரின் பெற்றோர் மற்றும் குடும்பத்திற்கு பேரதிர்ச்சியையும், துன்பத்தையும் ஏற்படுத்தும். பெற்றோரின் பொருந்துன்பம் என்பது அவர்களது வாழ்நாளின்போது அவர்களது குழந்தையை இழப்பதுதான். அன்பு, பாசம் மற்றும் குடும்பத்தில் குழந்தைகளின் பங்கு மதிப்புமிக்கது.

32. உலகலாவிய நவீன அதிகாரவரம்புகளும், குழந்தை இறக்கும்பட்சத்தில், குழந்தை சார்ந்த நல்லுறவின் மதிப்பானது, வழங்கப்பட்ட இழப்பீட்டின் பொருளியல் சார்ந்த மதிப்பை மிஞ்சுவதாகக் கூறுகிறது. பெரும்பாலான அதிகார வரம்புகள், குழந்தை இறந்ததன்பேரில், நல்லுறவு இழப்பின் கீழ் பெற்றோருக்கு இழப்பீட்டை வழங்கும்படி அனுமதிக்கின்றன. பெற்றோருக்கு வழங்கப்படும் தீர்வம், இறந்த குழந்தையின் அன்பு, பாசம், பாதுகாப்பு, தோழமை ஆகியவற்றுக்கான இழப்பீடாகும்.

33. உண்மையான கோருரிமைகளாக இருக்கும்பட்சத்தில், 1988–ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டமானது பாதிக்கப்பட்டவருக்கும், அவரது குடும்பத்திற்கும் பரிகாரம் அளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட நன்மைபயக்கும் சட்டமாகும். பெற்றோர் அவர்களது இளவர் குழந்தையையோ, திருமணமாகாத மகன் அல்லது மகளையோ இழக்க நேர்ந்தால், மகவுரிமை சார்ந்த நல்லுறவு என்ற பேரில் நல்லுறவு இழப்பை பெற அவர்கள் உரியவர்கள். பெற்றோர் சார்ந்த நல்லுறவு இழப்பீடானது, வாகன விபத்தில் தங்களது பெற்றோரின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் இழந்த குழந்தைக்கு வழங்கப்படும். நல்லுறவு இழப்பின்பாலான தீர்வளிப்புத்தொகை என்பது, பிரனய் சேதி [தேசிய இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– பிரனய் சேதி, (2017) 16 எஸ்.சி.சி. 680 : (2018)3 எஸ்.சி.சி. (உரிமையியல்) 248 : (2018) 2 எஸ்.சி.சி. (குற்றவியல்) 205) என்ற வழக்கில் நிர்ணயிக்கப்பட்ட தொகைப்படி இருத்தல்வேண்டும்.

34. இந்த நிலையில், அன்பு மற்றும் பாசத்தின் இழப்புக்காக நல்லுறவு உரிமையை சீறிய முறையில் வழங்குவது அவசியமானதென நாங்கள் கருதுகிறோம். பல்வேறு தீர்ப்பாயங்களும், உயர் நீதிமன்றங்களும் நல்லுறவு இழப்புக்காகவும், அன்பு மற்றும் பாசத்தின் இழப்புக்காகவும் இழப்பீடு வழங்கியுள்ளது. பிரனய் சேதி [தேசிய இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– பிரனய் சேதி, (2017) 16 எஸ்.சி.சி. 680 : (2018)3 எஸ்.சி.சி. (உரிமையியல்) 248 : (2018) 2 எஸ்.சி.சி. (குற்றவியல்) 205) என்ற வழக்கில் அரசமைப்பு அமர்வு, இழப்பீடு வழங்கப்படவேண்டிய மூன்று சட்டத் தலைப்புகளான அதாவது சொத்து சார்ந்த இழப்பு, நல்லுறவு இழப்பு மற்றும் ஈமக்கடன் சார்ந்த இழப்பு ஆகியவற்றிறை மட்டுமே அங்கீகரித்துள்ளது. மாக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் என்ற வழக்கில் [மாக்மா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– நானு ராம், (2018) 18 எஸ்.சி.சி. 130 (2019) 3 எஸ்.சி.சி (உரிமையியல்) 146 (2019) 3 எஸ்.சி.சி (குற்றவியல்) 153) வாழ்க்கைத் துணை நல்லுறவு, பெற்றோர் சார்ந்த நல்லுறவு மற்றும் மகவுரிமை சார்ந்த நல்லுறவு ஆகிய நல்லுறவுக்கு விரிவான பொருள் விளக்கம் அளித்துள்ளது. அன்பு மற்றும் பாசத்தின் இழப்பானது, நல்லுறவு இழப்பு என்ற பேரில் அறிந்துகொள்ளப்படுகிறது.

35. சட்டஞ்சார்ந்த் தலைப்புகளான நல்லுறவு இழப்புக்காக இழப்பீட்டை வழங்கும்படி தீர்ப்பாயங்களும், உயர் நீதிமன்றங்களும் உத்தரவிடப்படுகின்றன. அன்பு மற்றும் பாசத்தின் இழப்பு என்ற தனித்தலைப்பின் கீழ் இழப்பீட்டை வழங்குவது நியாயமற்றது."

14. ஆணையுறுதி ஆவணத்தில் 1–ஆம் மேல்முறையீட்டாளரின் சான்றுரைப்படி, அவரது கணவர் ரூ.12,450/–ம் ஊதிய பெற்றிருந்தார் என்றும், அவர் 50 வயதை கடந்தவர் என்பதுமாகும். மாத ஊதியத்திற்கான சான்று இல்லாததால், கற்றறிந்த தீர்ப்பாயம், இறந்தவரின் மாத வருமானத்தை ரூ.10,000/–என கணக்கிட்டது. எனவே, பிரனய் சேதி என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்படி, அவரது வருமானம், வயது மற்றும் எதிர்கால நலன்களை கருத்திற்கொண்டு இழப்பீட்டுத் தொகையை பின்வருமாறு கணக்கிட்டது:

	தலைப்பு	தொகை
அ	மாத ஊதியமாக ரூ.10,000/– மற்றும் 15% எதிர்கால நலன்களுக்கான வருமான இழப்பு (6,670/– + 1000 * 12 * 11)	ரூ.10,12,440.00
ஆ	சொத்து இழப்பு	ரூ.15,000.00
இ	மனைவிக்கு வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பும், பிள்ளைகளுக்கு பெற்றோர் சார்ந்த நல்லுறவின் இழப்பும் (2 & 3–ஆம் மேல்முறையீட்டாளர்கள்) ஒவ்வொருவருக்கும் ரூ.40,000/–	ரூ.40,000/– ரூ.80,000/–
ஈ	ஈமக்கடன் செலவீனங்கள்	ரூ.15,000/–
	மொத்தம்	ரூ.11,62,440/– ரூ.11,63,000/–

15. எனவே, கோருரிமை மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் கைவரப்பெறும் நாள்வரை தீர்ப்பாயத்தால் வழங்கப்பட்டதுபோன்று, ஆண்டு ஒன்றுக்கு 7% வட்டியுடன்கூட தொகை ரூ.11,63,00/–ம் இழப்பீடாக வழங்கப்படுகிறது.

16. இதன் விளைவாக உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. எனவே, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."